**செய்தி வெளியீடு எண்:761** **நாள்: 10.11.2017**

**<u>செய்தி வெளியீடு</u>**

அசாம் தலைநகர் கவுஹாத்தியில் **10.11.2017** அன்று நடைபெற்ற **23–**வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் (மீன்வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தம்) அவர்கள் கலந்து கொண்டார்கள்.

வணிக பிரதிநிதிகள், வணிக கூட்டமைப்பு மற்றும் வணிகர்களிடமிருந்து வரி குறைப்பு மற்றும் வரி விலக்கு தொடர்பான பல்வேறு கோரிக்கைகளை ஒருங்கிணைத்து மன்றம் பரிசீலிக்க வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். இவ்வாறு தொடர்ந்து தமிழ்நாடு வலியுறுத்தியதன் விளைவாக கீழ்க்கண்ட பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டு அறிவிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன:-

(i) **70–**க்கும் மேற்பட்ட பொருட்களின் மீதான வரியானது குறைக்கப்பட்டு அல்லது விலக்களிக்கப்பட்டுள்ளது.

(ii) ஜவுளி மற்றும் ஜவுளி பொருட்கள் தொடர்பான அனைத்து சில்லறை வேலை சேவை மீதான வரியினை **18**% லிருந்து **5**% ஆக குறைக்கப்பட்டுள்ளது.

(iii) அரசாங்கத்திற்கு வழங்கப்படும் குறிப்பிட்ட ஒப்பந்த பணி சேவைகளுக்கு (Works Contract Services) GST சட்டத்தின்கீழ் முழு உள்ளீட்டு வரி வரவு (ITC) பெறும் வகையில் வரி குறைக்கப்பட்டுள்ளது.

(iv) அச்சுத் தொழில், நகை செய்யும் தொழில், உணவு மற்றும் உணவுப்பொருட்கள் தொடர்பான சில்லறை வேலை சேவைகள் மீதான வரியை முழு உள்ளீட்டு வரி வரவு (ITC) பெறும் வகையில் குறைக்கப்பட்டுள்ளது.

(v) பொது விநியோக திட்டத்தின்கீழ், மத்திய மற்றும் மாநில அரசுகளால் நடத்தப்படும் நியாய விலை கடைகளுக்கு செலுத்தப்படுகிற Commission அல்லது Margin மீதான வரியிலிருந்து முழு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(vi) விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் டிராக்டருக்கான சில பிரத்யேக பாகங்கள் மீதான வரியினை 28% லிருந்து 18% ஆக குறைக்கப்பட்டுள்ளது.

(vii) விவசாய விளைச்சல்கள் சேமித்து வைப்பதற்கான உள்கட்டமைப்பு அமைப்பது தொடர்பான ஒப்பந்தப் பணிகள் மீதான வரி 12% ஆக குறைக்கப்பட்டுள்ளது.

(viii) வாகனங்கள் குத்தகைக்கு விடப்படும் நேர்வுகளில் விதிக்கப்படக்கூடிய வரியானது குறைக்கப்பட்டுள்ளது.

(ix) செங்கல் தொழில் தொடர்பான சில்லறை வேலை சேவைகள் மீதான வரியானது குறைக்கப்பட்டுள்ளது.

(x) ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சத்துமாவிற்கு 5% ஆக வரி குறைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அளித்துள்ள மேலும் உள்ள கோரிக்கைகளும் உரியவாறு பரிசீலிக்குமாறு தொடர்ந்து வலியுறுத்தியதன் அடிப்படையில், சென்ற முறை புதுடில்லியில் நடைபெற்ற 22–வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டத்தில் சரக்குகள் மற்றும் சேவைகள் மீதான வரி வீதத்தினை அத்தியாயம் வாரியாக ஆய்வு செய்து பரிந்துரை செய்வதற்காக மத்திய மற்றும் மாநில அலுவலர்கள் அடங்கிய துணை குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்தக் குழுவானது, தமிழ்நாடு உள்ளிட்ட பிற மாநிலங்களிலிருந்து வரப்பெற்ற சரக்குகள் மற்றும் சேவைகள் மீதான வரியினை குறைப்பது மற்றும் விலக்களிப்பது தொடர்பான

கோரிக்கைகளை பரிசீலித்து தனது பரிந்துரையினை வழங்கியுள்ளது. அப்பரிந்துரைகள் இன்றைய கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டன.

இத்துணைக்குழுவானது, தற்போது 28% வரிக்குட்பட்டுள்ள 228 வகையான பொருட்களின் மீதான வரியினை மறுசீராய்வு செய்துள்ளது. அதில் மின் சாதனங்கள் மற்றும் கருவிகள், கைக் கடிகாரம் மற்றும் அதன் பாகங்கள், உணவு தயாரிப்பதற்கான பொருட்கள், விளக்கு மற்றும் அதன் பாகங்கள், தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் லுப்ரிகேட்டிங் ஆயில், சால்வென்ட், தின்னர், பிளாஸ்டிக் தரை விரிப்புகள், வீட்டு உபயோகத்திற்காக பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் மற்றும் ரப்பர் பொருட்கள், அனைத்து வகையான கைப்பைகள் மற்றும் அங்காடி பைகள், தோலினால் செய்யப்படும் ஆடைகள், பிளைவுட்கள் மற்றும் போர்டுகள், கண்ணாடி வகைகள், சிமெண்ட் மற்றும் மைக்கா பொருட்கள், இரும்பு, ஸ்டீல், பிளாஸ்டிக் மற்றும் செரமிக்கால் செய்யப்படும் துப்புரவு பொருட்கள், அனைத்து வகையான ஸ்டவ், கதவு, ஜன்னல் மற்றும் அதன் சட்டங்கள், வீட்டு உபயோகத்திற்கான வெட்டுக் கருவிகள், அலுவலக பயன்பாட்டிற்கான பொருட்கள் மற்றும் இயந்திரங்கள், பெயர் பலகைகள், அனைத்து வகையான பிரிண்டர்கள், யூ.பி.எஸ்., மற்றும் பேட்டரிகள், புகைப்படம் மற்றும் திரைப்படம் தொடர்பான சாதனங்கள் மற்றும் கருவிகள், நில அளவைக்கான கருவிகள் மற்றும் சாதனங்கள், உடற்பயிற்சி மற்றும் பொழுதுபோக்கிற்கான கருவிகள், பிளாஸ்க், கிரானைட் மற்றும் மார்பிள் போன்ற 166 பொருட்கள் மீது 28% லிருந்து 18% ஆக வரி குறைப்பதற்கு இத்துணைக்குழுவானது பரிந்துரை செய்துள்ளது.

மேலும், இக்குழுவானது 58 இனங்களில் பொருட்களின் மீதான வரியினை 18%/12% லிருந்து 12%/5%/0% ஆக குறைப்பதற்கும் பரிந்துரைத்துள்ளது. இது குறித்தும் இன்றைய கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இந்நேர்வில் தமிழ்நாடு மீண்டும் மீண்டும் வலியுறுத்தியதன் அடிப்படையில், எடையிடும் இயந்திரம், கம்ப்ரசர்கள், அறைகலன்கள், வீட்டு பயன்பாட்டிற்கான மின் கருவிகள் மற்றும் சாதனங்கள், கான்கிரீட் பிளாக், பட்டாசு, பாலியெஸ்டர் இழை கொண்டு செய்யப்படும் மெத்தைகள் மற்றும் தலையணைகள் குழந்தைகளுக்கான படுக்கைகள் ஆகியவற்றின் மீதான வரியினை 28% லிருந்து 18% ஆக குறைப்பதற்கு; வெட் கிரைண்டர்கள் மீதான வரியினை 28% லிருந்து 12% ஆக குறைப்பதற்கு; இட்லி, தோசை மாவு, மீன்பிடிப்பதற்கான வலைகள், கயறுகள் மற்றும் கொக்கிகள், Fly ash கற்கள் ஆகியவற்றின் மீதான வரியினை 12% லிருந்து 5% ஆக குறைப்பதற்கு; கடலை மிட்டாய் மீதான வரியினை 18% லிருந்து 5% ஆக குறைப்பதற்கு; பருத்தி மற்றும் சணலினால் செய்யப்படும் கைப்பைகள் மற்றும் அங்காடி பைகள் மற்றும் மூக்கு கண்ணாடி சட்டங்கள் மீதான வரியினை 18% லிருந்து 12% ஆக குறைப்பதற்கு; வணிக சின்னமிடப்படாத கருவாடு மீது வரியிலிருந்து விலக்களிப்பதற்கான கருத்துருக்களும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

AC வசதி இல்லாத உணவகங்களில் உணவு மற்றும் பானங்கள் விநியோகிப்பின் போது 5% மற்றும் AC வசதி உள்ள உணவகங்களுக்கு 12% வரி விதித்திட வேண்டும் என்று தொடர்ந்து மன்ற கூட்டங்களில் தமிழ்நாடு வலியுறுத்தி வருகிறது. இந்நேர்வில், அமைச்சர்கள் அடங்கிய குழு ஒன்று இணக்க முறையில் வரி செலுத்துவது மற்றும் உணவகங்கள் மீதான வரி அமைப்பினை மாற்றியமைப்பது குறித்து ஆய்வு செய்து பல்வேறு பரிந்துரைகளை வழங்கியுள்ளது. அதன் அறிக்கையானதும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இந்த குழுவானது, இணக்க முறையில் வரி செலுத்தும் சிறு வணிகர்களுக்கான உச்ச வரம்பினை ரூ.1 கோடியிலிருந்து ரூ.1.5 கோடியாக உயர்த்துவது மற்றும் இணக்க முறையின்கீழ் வரும் வணிகர்கள் பொருட்களின் இடைமாநில விநியோகம் மேற்கொள்ளவும்

வழிவகை செய்வது குறித்து பரிந்துரைத்துள்ளது. மேலும், பல்வேறு வகையான உணவகங்களுக்கு வரி அமைப்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்பது குறித்தும் பரிந்துரைத்துள்ளது. இப்பரிந்துரைகளும் இக்கூட்டத்தில் மீண்டும் விவாதிக்கப்பட்டன.

ரூ. 1.5 கோடிக்கு கீழ் வருடாந்திர விற்பனை அளவு கொண்டுள்ள வரி செலுத்துவோர்க்கு மாதந்தோறும் நமூனா தாக்கல் செய்ய வேண்டும் என்பதற்கு பதிலாக மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தாக்கல் செய்வது குறித்து இந்தக் கூட்டத்தில் மீண்டும் விவாதிக்கப்பட்டது.

மேலும், டூரிஸ்ட் ஆப்ரேட்டர்களால் அதே வணிகத்தில் ஈடுப்பட்டுள்ளவர்களிடமிருந்து பெறப்படும் சேவைகள் மீது உள்ளீட்டு வரி வரவு பெறுவதற்கான வசதியுடன் 5% சலுகை வரி செலுத்துவதற்கான கருத்துருவும் விவாதிக்கப்பட்டது.

வணிக பிரதிநிதிகள், வணிக கூட்டமைப்புகள் மற்றும் வணிகர்களிடமிருந்து வரப்பெற்று இன்னும் பரிசீலனையில் உள்ள கீழ்க்கண்ட கோரிக்கைகள் மீது விரைந்து முடிவெடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இக்கூட்டத்தில் வலியுறுத்தினார்கள்:-

- வறுகடலை மற்றும் பட்டாணிக்கு வரியிலிருந்து முழுவதும் விலக்களித்திட வேண்டும்.
- வணிகச் சின்னம் இடப்பட்ட அல்லது இடப்படாத அனைத்து உணவுப் பொருட்களுக்கும் வரியிலிருந்து விலக்களித்திட வேண்டும்.
- கைத்தறி மற்றும் விசைத்தறி பொருட்களுக்கு முற்றிலுமாக வரியிலிருந்து விலக்களித்திட வேண்டும்.

- ஜவுளி தொழில் தொடர்பான இயந்திரங்களின் பாகங்கள் மீதான வரியினை 18% லிருந்து 5% ஆக குறைத்திட வேண்டும்.
- கையினால் தயாரிக்கப்படும் தீப்பெட்டிகள் மற்றும் இயந்திரம் கொண்டு தயாரிக்கப்படும் தீப்பெட்டிகள் என்று வேறுபடுத்தாமல் ஒரே சீராக 12% வரி விதிக்கப்பட வேண்டும்.
- 20 லிட்டர் கேன்களில் விற்கப்படும் குடிதண்ணீருக்கு வரியிலிருந்து முழுவதுமாக விலக்களித்திட வேண்டும்.
- ஜவ்வரிசி மற்றும் எண்ணெய் எடுக்க பயன்படுத்தப்படும் அரிசி தவிடு ஆகியவற்றிற்கு வரியிலிருந்து முழுவதுமாக விலக்களித்திட வேண்டும்.
- ஊறுகாய் மற்றும் சின்னமிடப்படாத சர்க்கரை மிட்டாய்கள் மீதான வரியினை 5% ஆக குறைத்திட வேண்டும்.
- விவசாயத்திற்கு பயன்படுத்தக்கூடிய நுன் ஊட்டச்சத்துக்கள் மீதான வரியினை 12% ல் இருந்து 5% ஆக குறைத்திட வேண்டும்.
- பம்புசெட்டுகள் மீதான வரியினையும் 5% ஆக குறைத்திட வேண்டும்.
- கிலோ 100 ரூபாய்க்கு மேல் மதிப்பு கொண்ட பிஸ்கட்டுகளுக்கு 18% ஆகவும் மற்றும் கிலோ 100 ரூபாய்க்கு கீழ் மதிப்பு கொண்ட பிஸ்கட்டுகளுக்கு 5% ஆகவும் வேறுபடுத்தி வரி விதித்திட வேண்டும்.
- Recycled plastic மீதான வரியினை 18% ல் இருந்து 12% ஆக குறைத்திட வேண்டும்.
- மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தும் பல பொருட்கள் மீதான வரியானது 5% ல் தான் உள்ளது என்றாலும் மீதமுள்ள சில பொருட்களுக்கு வரியினை 5% ஆக குறைத்திட வேண்டும்.
- தாய்மார்கள் மற்றும் பெண்களின் நலன் கருதி sanitary napkins மீதான வரியினை 5% ஆக குறைத்திட வேண்டும் .

- உரம் தயாரிக்க பயன்படுத்தப்படும் இடுபொருளான phosphoric acid மீதான வரியினை 5% ஆக குறைத்திட வேண்டும்.
- 500 CC இயந்திர திறன் கொண்ட மோட்டார் வாகனங்களின் மீது மட்டும் மேல்வரி விதித்திட வேண்டும்.
- தோல் பதனிடும் தொழில் தொடர்பான சில்லறை வேலை மீதான வரியினை 18% ல் இருந்து 5% ஆக குறைத்திட வேண்டும்.
- ஆட்டோ உதிரி பாகங்கள் மீதான வரியினை 12% ஆக குறைத்திட வேண்டும்.
- செயற்கை ரப்பர் கொண்டு செய்யப்படும் tyre retreading மீதான வரியினை 5% ஆக குறைத்திட வேண்டும்.
- கல்லூரி நிறுவனங்களால் செய்யப்படும் outsourcing சேவைகள் மீது வரியிலிருந்து விலக்களித்திட வேண்டும்.
- ஆயுள் காப்பீட்டு சேவைகளுக்கு வரியிலிருந்து விலக்களித்திட வேண்டும்.
- கேளிக்கை பூங்காக்கள் மீதான வரியினை குறைத்திட வேண்டும்.
- வெள்ளி கொலுசு, மெட்டி மற்றும் அரைஞான் கயறு ஆகியவற்றிற்கு வரியிலிருந்து முழுவதுமாக விலக்களித்திட வேண்டும்.
- தாலிக்கயறுக்கு வரியிலிருந்து முழுவதுமாக விலக்கு அளித்திட வேண்டும்.
- பட்டினால் நெய்யப்பட்ட ஆடைகளுக்கு வரியிலிருந்து முழுமையாக வரிவிலக்களித்திட வேண்டும்.
- பட்டு நூலுக்கு வரியிலிருந்து முழுவிலக்கு அளித்திட வேண்டும் என்றும், பட்டு சரிகை மீதான வரியினை 12% ல் இருந்து 5% ஆக குறைத்திட வேண்டும்.
- கோயமுத்தூர் மற்றும் அதன் சுற்று வட்டாரத்தில் உள்ள பகுதிகளில் lathe பட்டறைகள் மற்றும் சிறு சிறு இயந்திர பாகங்கள் தொடர்பான சில்லரை வேலைகள் அதிகம் நடைபெற்று வருகிறது. இவ்வாறு மேற்கொள்ளப்படும்

சில்லரை வேலைகள் மீதான வரியினை 18% லிருந்து 5% ஆக குறைத்திட வேண்டும்.

- விபூதிக்கு GST வரியிருந்து முழு வரிவிலக்களித்திட வேண்டும்.
- கழிவு செய்யப்பட்ட டயர்கள் (condemned tyres) மீது 28% வரிவிதிப்பதால் அதனை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் காலணிகள் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. ஆகையால் கழிவு செய்யப்பட்ட டயர்கள் மீது GST–வரியிருந்து விலக்களித்திட வேண்டும்.
- பூஜைக்கு பயன்படும் பொருளான கற்பூரத்தின் மீதான வரியினை அகர்பத்திக்கு இணையாக 18% லிருந்து 5% ஆக குறைத்திட வேண்டும்.
- வீட்டு உபயோக பொருளான சீகைக்காய் மீதான 5% வரியினை முழுமையாக நீக்கிட வேண்டும்.
- உலர்ந்த பாக்கினையும் (Dried Areca nut) விவசாய பொருளாக வகைப்படுத்திட வேண்டும் என்றும், அதற்கு வரியிலிருந்து முழுமையாக விலக்களித்திட வேண்டும்.
- கைவினை வர்ணப் பூச்சுகள், பித்தளை அலங்கார விளக்குகள் மீதான வரியினை 5% ஆக குறைத்திட வேண்டும்.
- அனைத்து வகையான ஆட்சேர்ப்பு (Man power) மீதான வரியினை 5% ஆக குறைத்திட வேண்டும்.
- சுருட்டு மீதான இழப்பீட்டு மேல் வரியினை நீக்கிட வேண்டும்.
- கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி தொடர்பான வானூர்தியில் பொருட்களை ஏற்றி செல்வதற்கான கட்டணம் மீதான வரியிலிருந்து முழுவதுமாக விலக்களித்திட வேண்டும்.
- கையினால் தயாரிக்கப்படும் பூட்டுகள் மற்றும் மெழுகுவர்த்திகளுக்கு வரியிலிருந்து விலக்களித்திட வேண்டும்.
- பயோ–டீசல் மீதான வரியினை குறைத்திட வேண்டும்.

- அலுமினியப் பாத்திரங்கள், பான்டேஜ் துணிகள், வெண்ணெய் மற்றும் நெய் மீதான வரியினை 12% லிருந்து 5% ஆக குறைத்திட வேண்டும்.
- காகிதம் கொண்டு தயாரிக்கப்படும் பொருட்கள் மீதான வரியினை 18% லிருந்து 12% ஆக குறைத்திட வேண்டும்.

கவுஹாத்தியில் நடைபெற்ற 23–வது சரக்குகள் மற்றும் சேவைகள் மன்ற கூட்டத்தில் சரக்குகள் மற்றும் சேவைகள் அமலாக்கத்தினால் ஏற்பட்டுள்ள சில ஆரம்ப கட்ட பிரச்சனைகள் களைவது குறித்தும் விவாதிக்கப்பட்டது. வணிகர்கள் தாமதமாக மாதாந்திரை நமூனாக்களை தாக்கல் செய்யும் பட்சத்தில் நாளொன்றுக்கு ரூ.200/– வீதம் தாமதத் தொகையினை (Late fee) செலுத்திட வேண்டும். எனினும், வணிகர்களின் நலன் கருதி ஜூலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களுக்கான தாமதத் தொகையினை செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்நேர்வில், வணிகர்கள் இந்த தாமதத் தொகையினை ஏற்கனவே செலுத்தியிருந்தால் அதனை அவர்கள் எதிர்காலத்தில் எழக்கூடிய வரிக்கு ஈடுசெய்து கொள்வதற்கான வழிமுறைகள் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. மேலும், தாமதத் தொகையினை குறைப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

வணிகர்களுக்கு நமூனாக்கள் தாக்கல் செய்வதற்கான கால அளவினை மேலும் நீட்டிப்பு செய்வதற்கும் இன்றைய கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**